# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 502 –2024

Deposition of Witness for D.W. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | மாடசாமி | **தாலுகா** | : | சிவகாசி |
| **த.பெ.** | : | குருசாமி | **தொழில்** | : | சிறப்பு காவல் ஆய்வாளர் |
| **ஊர்** | : | சிவகாசி | **வயது** | : | 51 / 26 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 10.03.2026.

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில், சிறப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எங்கள் காவல் நிலையத்திற்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. நான் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். அது பிம்சிங் 22.10.2023 அன்று எங்கள் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு மற்றும் அதன் பேரில் பதியப்பட்ட சிஎஸ்ஆர் எண்.708/2023 இரசீது மற்றும் மனுதாரர் பீம்சிங் எதிர் மனுதாரர் தெய்வம் ஆகியோர் போலீஸ் விசாரணையில் கொடுத்த வாக்குமூலம் மற்றும் மனு அடைப்பு தாள் ஆகியவற்றின் அத்தாட்சி நகலை தாக்கல் செய்கிறேன். அவை **<u>சா.சா.ஆ.1</u>** ஆகும்.

**<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

22.10.2023 அன்று இந்த வழக்கின் எதிரி எங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. சா.சா.ஆ.1 புகார் மனு சம்மந்தமாக பீம்சிங்கயோ, தெய்வத்தையோ நான் விசாரணை செய்யவில்லை. சார்பு ஆய்வாளர் சுந்தரராஜ் என்பவர் விசாரணை செய்தார். அந்த சார்பு ஆய்வாளர் சுந்தரராஜ் அவர்களை விசாரித்தால் சா.சா.ஆ.1 ஆவணத்தின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் நான் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க இயலும். சா.சா.ஆ.1 புகார் மனுவில் பீம்சிங் தெய்வத்துடன் சேர்ந்து தொழில் செய்ய துவங்கியதாகவும், தெய்வம் ரூ.15 லட்சம் கொடுத்ததாகவும் பீம்சிங் தெய்வத்திற்கு ரூ.28 லட்சம் வரை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. மேலும் பணம் கேட்டு தொந்தரவு செய்ததாக புகார் கொடுத்திருந்தார் என்றால் சரி.

22.10.2023 அன்று பீம்சிங் கொடுத்த வாக்குமூலத்தில் தெய்வத்திற்கு ரூபாய் மூன்றரை லட்சம் தரவேண்டும் என்றும் அந்த தொகையை 31.01.2024 தேதிக்குள் தருவதாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரி. அவ்வாறு பீம்சிங் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் தெய்வம் கையொப்பம் செய்யவில்லை என்றால் ஆம். தெய்வம் தனியாக எழுதிக் கொடுத்துள்ளார். தெய்வம் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் ரூபாய்

மூன்றரை லட்சத்தை பெற்றுக் கொள்வதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. தரவேண்டிய பணத்தை வாங்கி கொள்வதாக எழுதிக் கொடுத்துள்ளார். சா.சா.ஆ.1 புகார் மற்றும் வாக்குமூலத்தில் பீம்சிங் தெய்வத்திடமோ அல்லது தெய்வத்தின் நண்பரிடமோ இரண்டு காசோலைகள் கொடுத்திருப்பதாகவும் அதனை பெற்று தருமாறும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

பீம்சிங், பணத்தை தெய்வத்திற்கு கொடுத்தாரா இல்லையா என காவல் நிலையத்தில் இரு தரப்பினரும் வந்து சொல்லவில்லை என்றால் சரி. சா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் இர தரப்பினருக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றதாக தெரியவரும் என்றால் ஆம். தெய்வம் கொடுத்த வாக்குமூலத்தில் பீம்சிங்குடன் தொழில் செய்வதாகவும், அதற்காக பீம்சிங்கிற்கு பணம் கொடுத்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரி. அவரிடம் ரூ.15 லட்சம் பீம்சிங் வாங்கியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். புகார் மனுவிற்கு முன்னரோ பின்னரோ வரவு செலவு நடைபெற்றிருந்தால் அது குறித்து மனுவில் குறிப்பிட்டிருந்தால் மட்டும் எங்களுக்கு தெரியவரும் என்றால் ஆம்.

G. K... 881

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

K... 10/3/26

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.